**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.5099/ஆ5/2023, நாள். 26/02/2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – நர்கோ ஒருங்கிணைப்பு மையம் (Narco Coordination Centre) (NCORD) – நர்கோ ஒருங்கிணைப்பு மையத்தின் மறுசீரமைப்பு – (Restructuring of Narco Coordination Centre (NCORD) – வேலூர் மாவட்டம் – மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டது – பள்ளி மாணவர்களிடையே தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த சார்ந்த பள்ளிகளின் பொறுப்பாசியர்களுக்கான கூட்டம் 27.02.2024 அன்று காலை 10.15 மணிக்கு நடைபெறுதல் – கூட்டத்தில் கலந்துக்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண்.சி3/3591/2022, நாள். 23.02.2024

.....

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில், அரசு மற்றும் இந்திய அரசின் தலைமைச் செயலாளரின் அறிவுறுத்தலின்படி, புகையிலை மற்றும் நிகோடின் பொருட்கள் மீதான தடை உத்தரவை திறம்பட செயல்படுத்த மாவட்ட அளவிலின கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் இப்பொருள் சார்பாக பள்ளி மாணவர்களிடையே தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பாசிரியர்களுக்கான கூட்டம் 27.02.2024 (செவ்வாய்கிழமை) அன்று காலை 10.15 மணிக்கு வேலூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் A– Block, 5–வது தளத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பள்ளி மாணவர்களிடையே தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பாசிரியர்கள் மேற்காணும்படி நடைபெறும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான கூட்டத்தில் குறித்த நேரத்தில் தவறாமல் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசுநிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பொறுப்பாசிரியர்கள் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி )
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)